**DEPOSITION OF WITNESS**
**(Chapter X X I I I Code of Criminal Procedure)**
- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

**IN THE COURT OF DISTRICT MUNSIF - CUM JUDICIAL MAGISTRATE THIRUPPUVANAM**

Calender Case :
Miscellaneous : Case No: CC. No.90/2021
Preliminary Register :
Sessions :
Deposition of Witness for Prosecution : PW1
Defendant :
Court :

Name : பாண்டியம்மாள்
Father' s Name : சுப்பிரமணியன்
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of

---

07.08.2026 CC No.90/2021 அ.சா.1 பாண்டியம்மாள்

(எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் )

**முதல் விசாரணை:**

நான் பாட்டம் என்ற கிராமத்தில் வசித்து மக்கள் நல பணியாளராக பணி செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன சுப்பிரமணியன் எனது அப்பா ஆவார். நான் எதிரியுடன் சமாதானமாக செல்கிறேன். கடந்த 2019ம் வருடம் 7வது மாதம் 10ம் தேதி காலை 06.45 மணியளவில் பொட்டபாளையம் அருகே எனது அப்பாவிற்கு விபத்து ஏற்பட்டதாக ஒருவர் எனக்கு தகவல் கூறினார். நான் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை சென்று எனது அப்பாவைப் பார்த்தேன். எனது அப்பா இறந்துவிட்டார் என மருத்துவர் தகவல் கூறினார். விபத்து எவ்வாறு நடந்தது என்று எனக்கு தெரியாது. சந்தேகத்தின் அடிப்படையில் ஆஜர் எதிரி மீது நான் புகார் கொடுத்தேன் என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **மேற்படி புகார் மனு அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு**

R. VENKADESH PRASANTH
Digitally signed by R. VENKADESH PRASANTH
Date: 2026.08.07 13:58:14 +0530

**செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அவ்வாறே சாட்சி பிறழ் சாட்சியென அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது. )

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் எதிரியுடன் சமாதானமாக செல்வதாக சமாதான மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். கடந்த 10.07.2019ம் தேதியன்று காலை 06.45 மணியளவில் விராதனூர் – மதுரை ரோட்டில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி TN 20 G 1675 என்ற பதிவெண் கொண்ட டெம்போ டிராவலர் ஆம்புலன்சை அதன் ஓட்டுநரான ஆஜர் எதிரி அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து பொட்டபாளையம் பேருந்து நிறுத்தம் அருகே ரோட்டின் இடது ஓரமாக நடந்து சென்ற எனது அப்பா மீது மோதி எனது அப்பாவிற்கு தலையில் பலத்த ரத்தகாயம் ஏற்படுத்தி அதனால் எனது அப்பா இறந்தார் என நான் கொடுத்த புகாரிலும் எனது போலீஸார் விசாரணையிலும் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மை என்றும், நான் எதிரியுடன் சமாதானமாக செல்வதால் எதிரி கேட்டுக்கொண்டதற்கிணங்க உண்மையை மறைத்து சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

Taken down by me in open court readover/ interpreted to the witness in Tamil and acknowledged by him/ her to be correct.

R. VENKADESH PRASANTH

Digitally signed by R. VENKADESH PRASANTH
Date: 2026.08.07 13:58:25 +0530

District Munsif Cum Judicial Magistrate, Thiruppuvanam